இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022





IPL





புலமை மையம்

புள்ளி

தரம் - 05	நுண்ணறிவு	நேரம் : 1.30 மணித்தியாலம்
சுட்டெண் :		ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151

01ம், 02ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

01.  I.  II.  III. 

02.  I.  II.  III. 

03ம், 04ம் வினாக்களில் ஒரே கூட்டத்தைச் சேராத விடையை தெரிவு செய்க.

03. I.

கரட்
கோவா
லீக்ஸ்

II.

புலி
சிங்கம்
ஆடு

III.

கத்தரி
வெண்டி
தக்காளி

04. I.

வெட்சி
பவள மல்லிகை
குண்டு மல்லிகை


II.

கொக்கு
கழுகு
காகம்

III.

வடவை
பிடி
பெட்டை

05ம் , 06ம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்த தேவையான பகுதியை தெரிவு செய்க.

05.  I.  II.  III. 

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium



தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

06.  I.  II.  III. 

07. தயாவின் வயது அவனது மகனின் வயதின் 3 மடங்கிலும் 4 கூடியதாகும். மகனின் வயது 11 எனின் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

I. 37 II. 44 III. 48

08. காலை - சூரியகாந்தி எனின் இரவு .....


I. தாமரை II. ரோசா III. அலரி

09. விளையாட்டு – மைதானம் எனின் கல்வி .....

I. ஆசிரியர் II. மதஸ்தலம் III. பாடசாலை

10. நேற்று புதன்கிழமை 21ம் திகதி எனின் எதிர்வரும் வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி ஆகும்.

I. 23ம் திகதி II. 30ம் திகதி III. 28ம் திகதி

11.  அருகில் உள்ள உருவில் வெட்டி எடுக்கக் கூடிய அதிகபட்ச சதுரங்களின் எண்ணிக்கை யாது?

I. 14 II. 09 III. 03

12. 150 தொடக்கம் 155 வரையான எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கையை இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கையினால் பெருக்கினால் வருவது

I. 54 II. 49 III. 81

13. 'தப்பபிப்பிராயம்' எனும் சொல்லில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு ஆக்க முடியாத சொல் எது?

I. தப்பு II. பராயம் III. பதம்


14. 143, 248, 196 எனும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது வரும் முதலாம் எண்ணிண் மூன்றாம் எண்ணினும் நடுவில் வரும் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?



I. 08 II. 13 III. 12


www.lkedu.lk

15. ஓர் எண்ணை 6ஆல் பெருக்கி 3ஐக் கழித்து 9ஆல் பிரித்த போது விடை 3ஆக வந்தது எனின் ஆரம்ப எண்ணின் மூன்று மடங்கு பெறுமதி யாது?

I. 05 II. 15 III. 09

16.  சதுரமுகியொன்றை செய்ய பயன்படுத்தப்பட்ட தடித்த அட்டை ஒன்று இங்கு காணப்படுகிறது. இதனைக் கொண்டு அமைக்கப்பட்ட சதுரமுகின் பக்கத்தின் எதிர்ப்பக்கத்தில் காணப்படும் வடிவத்தின் கீழ் கோடிடுக.

I.  II.  III. 

17.  அருகில் உள்ள உருவானது தீக்குச்சிகளால் ஆக்கப்பட்டுள்ளது. இவ்வுரு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள தீக்குச்சிகளை பயன்படுத்தி ஆக்கத்தக்க உரோம எண் எது?

I. VI II. XVIII III. XVII

18. வீதி ஒன்றில் 4m இடைவெளியில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. முதலாவது மின் கம்பத்தில் இருந்து கடைசி மின்கம்பம் வரையான தூரம் 36m எனின் வீதியில் உள்ள மின்கம்பங்களின் எண்ணிக்கை யாது?

I. 09 II. 10 III. 12

19. 1796 யில் இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றினர். இவ்வாண்டின் நூற்றாண்டு, தசாப்தம் என்பன முறையே

I. 18ம் நூற்றாண்டு, 10ம் தசாப்தம் II. 19ம் நூற்றாண்டு, 09ம் தசாப்தம்
III. 18ம் நூற்றாண்டு, 09ம் தசாப்தம்

20. ஒரு மரத்தில் நாளொன்றில் 5 காய்கள் காய்க்கும் அதே வேளை 2 காய்கள் பறிக்கப்படுகின்றன. அம்மரத்தில் 32 காய்கள் எத்தனையாவது நாளில் காய்த்துக் கிடக்கும்.

I. 08ம் நாள் II. 12ம் நாள் III. 10ம் நாள்

www.lkedu.lk

21. மிதுன் வீட்டிலிருந்து மைதானத்திற்கு சென்ற திசைகளின் வரிப்படம் கீழே காணப்படுகிறது. இதன் படி மிதுன் மைதானத்திற்கு சென்ற திசை ஒழுங்குமுறையை தெரிவு செய்க.



I. கிழக்கு, வடமேற்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு

II. மேற்கு, வடக்கு,மேற்கு, தென்கிழக்கு, மேற்கு

III. கிழக்கு, வடகிழக்கு, கிழக்கு, தெற்கு, கிழக்கு

22. 25 வினாக்கள் கொண்ட ஒரு பரீட்சையில் அனைத்து வினாக்களிற்கு சரியான விடையளித்தால் 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாவிற்கு சரியான விடையளித்தால் 4 புள்ளிகள் வழங்கப்படுவதோடு பிழையாக விடையளித்தால் பெற்ற புள்ளியில் இருந்து 2 புள்ளிகள் கழிக்கப்படும். ரவி இப்பரீட்சையில் 64 புள்ளிகள் பெற்றான் எனின் அவன் சரியாக விடை அளித்த வினாக்களின் எண்ணிக்கை யாது?

I. 19 II. 18 III. 16

23. ஒருவரின் மகிழ்ச்சிக்கு உவமானமாக கூறக்கூடியது.

I. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல II. மல்லிகை பூத்தது போல

III. உயிரும் உடலும் போல

24. விருந்தொன்றில் கலந்து கொண்ட சிலர் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்ட போது 36 கைகுலுக்கல்கள் இடம் பெற்றதாயின் விருந்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை யாது?

I. 10 பேர் II. 08 பேர் III. 09 பேர்




25. சாரதா பரீட்சை ஒன்றில் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகளின் சராசரி 82 ஆக காணப்பட்டது. இப்பாடங்களுடன் தமிழ்ப் பாடத்தின் புள்ளிகளையும் சேர்த்த போது சராசரி 84 ஆக காணப்பட்டது. எனின் சராசரி தழிழ்ப்பாடத்தில் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

I. 84 II. 83 III. 92

26. 160யின் $\frac{1}{4}$ உடன் 100 யின் இருமடங்கை கூட்டும் போது கிடைப்பது எவ் எண்ணின் ஆறு மடங்காகும்.

I. 40 II. 60 III. 120

27.  அருகில் உள்ள உருவில் நிழற்றிய பின்னத்திற்கு சமனாக நிழற்றப்பட்டுள்ள வடிவத்தைத் தெரிவு செய்க.

I.  II.  III. 

28. நிமலன் மாலை வேளையில் அவனது நிழலை அவனுக்கு வலது பக்கத்தில் அவதானித்தாள் எனின் நிமலன் பயணிக்கும் திசைக்கு எதிர்த்திசை யாது?

I. வடக்கு II. கிழக்கு III. தெற்கு

29. 7cm நீளமான 6 கம்பித்துண்டுகள் ஒன்றன் மீது ஒன்று 2cm அளவு படுமாறு வைத்து ஒட்டப்பட்டது. எனவே ஒட்டிய பின்னர் வரும் கம்பியின் மொத்த நீளம் யாது?

I. 40cm II. 38cm III. 32cm

பின்வரும் பாடலடியை கொண்டு 30 , 31 ம் வினாக்களுக்கு விடை தருக.

உண்ண உணவு தருகின்ற
உழவர் வாழ்கவே!
மண்ணை உழுது செய்திடும்
உழவர் வாழ்கவே!

30. பாடலில் யாரை சிறப்பித்து கூறப்பட்டுள்ளது?

I. மண்ணை II. விவசாயத்தை III. உழவரை

31. விவசாயத்திற்கு உதவும் விலங்கு ஒன்று அல்லாதது

I. யானை II. மண்புழு III. எருமை

32. ரவி கமலாவை விட உயரம் கூடியவனாயினும் விமலாவை விட உயரம் குறைந்தவனாவான். சிவா விமலாவை விட உயரம் குறைந்தவனாயினும் ரவியை விட உயரம் கூடியவனாவான் எனவே உயரத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?

I. ரவி, கமலா, சீலா, விமலா II. கமலா, ரவி, சீலா, விமலா

III. விமலா, சீலா, கமலா, ரவி


33. சிவாவிடம் உள்ள பணத்தை விட 90 ரூபாவை மதன் கூடுதலாக வைத்துள்ளான் இருவரிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை ரூ. 280.00 எனின் மதனிடம் உள்ள பணம் எவ்வளவு?

I. ரூ. 180. 00 II. ரூ. 210. 00 III. ரூ. 90. 00

34. அடுத்த வரும் 5 இரட்டை எண்களின் கூட்டுத்தொகை 60 எனின் அவற்றுள் பெரிய எண் எது?

I. 12 II. 16 III. 14

35. தரப்பட்டுள்ள கூட்டல் பிரசினத்தில் △ யினால் ஓர் இலக்கமும் □ யினால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளன. அவ்விலக்கங்கள் முறையே யாவை?




I. 08, 01 II. 01, 15 III. 05, 01

36. ரமணி பாடப்புத்தகம் ஒன்றில் 27ம் பக்கத்திலிருந்து 43ம் பக்கம் வரை வாசித்து விட்டு மீண்டும் வந்து 11 பக்கங்களை வாசித்தான் எனின் அவன் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?

I. 28 II. 27 III. 31

37, 38ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களை விளங்கி வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

37.



I. 33 II. 65 III. 47

38. 0 . 3, 0 . 6, 0 . 9 ……..

I. 0. 12 II. 0. 02 III. 1 . 2

39. வீடு கொத்தன் என்பது போல மோதிரம் ……

I. கொல்லன் II. தச்சன் III. பொற் கொல்லன்

40. இருபக்கங்களும் சமனாக உள்ள நிரையை தெரிவு செய்க.

I. A 2 B C # * 3 5 1 - A 2 B C # * + 3 5 1

II. O 5 7 9 1 x B 2 5 5 3 - O 5 7 9 1 * B 2 5 5 3

III. T X B 3 5 1 S Y 5 3 - T X B 3 5 1 S Y 5 3

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

IPL

புலமை மையம்

புள்ளி

தரம் - 05	தமிழ்	நேரம் : 1.30 மணித்தியாலம்
சுட்டெண் :		ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151

01 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. தமிழில் உள்ள குறில் உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

I. 05 II. 90 III. 126

02. புற்றரை எனும் சொல்லை பிரித்தெழுதினால் வருவது

I. புல் + தரை II. புற் + தரை III. புற் + றரை

03. பின்வருவனவற்றுள் உயர்திணை தன்மை பன்மைச் சொல் அல்லாதது எது?

I. நாங்கள் II. நாம் III. நான்

04. பறவையின் மலம் எச்சம் எனப்படுவது போல யானையின் மலம்

I. பிழுக்கை II. இலத்தி III. விட்டை

05. பச்சைக் கிளி கனிய பழத்தை கொத்தித் தின்றது எனும் வாக்கியத்தில் இடம் பெறும் அடைமொழி அல்லாத சொல் எது?

I. பச்சை II. பழத்தை III. கொத்தி

06. தங்கத்தாத்தா என அழைக்கப்பட்ட புலவர்

I. மு.நல்லதம்பிப் புலவர் II. சின்னத்தம்பிப் புலவர் III. சோமசுந்தரப் புலவர்

07. முக்கனிகள் என்பதை குறிக்கும் பழங்கள் எவை

I. மா, பலா, விளா II. மா, பலா, வாழை III. வாழை, பலா, பப்பாசி

08. பாங்கன் எனும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

I. பாங்கி II. பாங்கினி III. பாங்காட்டி

09. கானகம் எனும் சொல்லின் ஒத்த சொல் அல்லாதது எது?

I. காடு II. வனம் III. புதர்

10. ஏட்டிக்குப் போட்டி எனப்படுவது

I. இணைமொழி II. இரட்டைக்கிளவி III. அடுக்குமொழி

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

11. வெற்றி அடைதல் எனும் கருத்தை உணர்த்தும் மரபுத் தொடர் எது

I. கைகூடுதல் II. வாகை சூடுதல் III. உச்சி குளிர்தல்

12. நகமும் சதையும் போல எனும் உவமைத் தொடரின் கருத்து எது?

I. மறைவான தன்மை II. பகைமை III. பிரிக்க முடியாத உறவு

13. கடிதம் ஒன்றின் பிரதானமான பகுதியாக அமைவது

I. விடயம் II. முகவரி III. முடிவு

14. பாத்திமா கண்டியில் வசித்து வந்தார். பாத்திமா என்பது எவ்வகை பெயர்ச் சொல்லாகும்.

I. காலப்பெயர் II. பொருட்பெயர் III. இடப்பெயர்

15. கீரிக்கு பிள்ளை போல மீனுக்கு .....

I. குஞ்சு II. குட்டி III. பறள்

(15 X 2 = 30 புள்ளிகள்)

16. பின்வரும் சுருக்க குறியீடுகளை விரித்து எழுதுக.

01. இ.பெ.கூ - .....

02. ம.ப.பா - .....

03. பி.கு - .....

(3 x 2 = 6 புள்ளிகள்)

17. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

I. உடல் - ..... II. சந்திரன் - .....

III. கண் - ..... IV. கோபம் - .....

(4x 1 = 4 புள்ளிகள்)

18. கீழ்வரும் சொற்களுள் சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்க

I. A. சவுக்காரம் B. சவர்க்காரம் C. சவற்காரம்

II. A. தலையணை B. தலகணை C. தலகாணி

III. A. ஆராய்சி B. ஆராட்சி C. ஆராய்ச்சி

(3 புள்ளிகள்)

19. பின்வரும் வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

I. நாய் முயலை வேகமாக துரத்திச் சென்றது.

.....

II. சிறுவன் தனது புத்தகத்தை மேசையில் வைத்தான்.

.....

(2 புள்ளிகள்)

www.lkedu.lk

20. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

I. நாக்குப் புரளுதல் - ……. II.முகம் மலர்தல் - ……..

III. கண் வளர்தல் - …… IV.முகங்கோணுதல் - ……

(4 புள்ளிகள்)

21. பின்வரும் சொற்களை பிரித்தெழுதுக.

I. வெற்றிலை - …….. II. புற்றீசல் - ……..

III. அருட்கொடை - …….... IV. பொற்றாமரை - ……

(4 புள்ளிகள்)

22. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

I. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? - ……

II. ஆழம் அறியாது காலை விடாதே - ……..

(4 புள்ளிகள்)

23. பின்வருவனவற்றின் தனிச் சொல்லை எழுதுக.

I. யாவருக்கும் இல்லையெனாது வாரி வழங்குபவன் - ……...

II. மனைவியை இழந்தவன் - ……

III. அறிஞர் கூடி வாதிடும் மன்றம் - ……...

(3 புள்ளிகள்)

24. பின்வரும் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

I. எனது மகன் நன்றாகப் படித்தான் - ……..

II. நாயகன் குழுவினரோடு பயணித்தான் - ……

(2 புள்ளிகள்)

25. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. பவளக் கொடி எனும் பாடலை எழுதியவர் யார்? ……

II. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்தவர் யார்.? ……

III. முத்தமிழ் எனப்படுபவை எவை? ……

IV. நெகிழி என அழைக்கப்படுவது எது? ……

V. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் காணப்படுகின்றன. ……..

VI. ஔவையார் இயற்றிய பாடல் தொகுப்புக்கள் 3 தருக? ……..

VII. சின்னத்தம்பிப் புலவர் வாழ்ந்த ஊர் எது? ……

VIII. பவனி வரும் நிலா எனும் பாடலை பாடியவர் யார்? ……...

IX. இராமனுக்கு பணிவிடை செய்த வேடுவ குலத் தலைவன் யார்? ……

(18 புள்ளிகள்)

www.lkedu.lk

26. அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை பூர்த்தி செய்க.

(கமலன், மாடு, நீவிர், அவை, சீலா, நான், வந்தோம், மேயும், போனார்)

I. உயர்திணை தன்மை ஒருமை பெயர்ச்சொல் எது? .....

II. அ.ஃறினை பன்மை படர்க்கை பெயர்ச்சொல் எது? .....

III. உயர்திணை தன்மை பன்மை வினைச் சொல் எது? .....

IV. அ.ஃறினை எதிர்கால வினைச் சொல் எது? .....

V. உயர்திணை முன்னிலை பெயர்ச்சொல் எது ? .....

VI. உயர்திணை ஆண்பால் பெயர்ச்சொல் எது? .....

VII. உயர்திணை படர்க்கை வினைச்சொல் எது? .....

VIII. உயர்திணை பெண்பால் சொல்? .....

(8 புள்ளிகள்)

27. பின்வரும் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

I. மழலை - .....

II. தென்றல் - .....

III. அலரி - .....

(6 புள்ளிகள்)

28. பின்வரும் பந்தியை கொண்டு அதன் கீழ் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

நாங்கள் பேராதனையில் இருந்து கண்டி மாநகருக்குச் சென்றோம் இயற்கை எழிலோடு சேர்ந்த ஓர் அழகிய நகரம் அது. பூத்துக் குலுங்கும் மரங்களும் தெப்பக் குளமும் அருகே தலதா மாளிகையின் தங்கக் கூரையும் கண்டி மாநகரை தேவலோகம் போல திகழச் செய்தன. எல்லாவற்றையும் கண்குளிர கண்டு களித்தோம்.

I. அழகிய நகரம் எது? .....

II. 'செயற்கை' எனும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. .....

III. 'அழகு' எனும் சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. .....

IV. பந்தியில் இடம்பெறும் உவமானத்தை எழுதுக. .....

V. தன்மை பன்மை பெயர்ச் சொல் எது? .....

VI. 'களித்தோம்' எனும் சொல்லை எதிர் காலத்தில் எழுதுக. .....

(6 புள்ளிகள்)

www.ikedu.lk

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

IPL

புலமை மையம்

புள்ளி

தரம் - 05	கணிதம்	நேரம் : 1.30 மணித்தியாலம்
சுட்டெண் :		ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151

01 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. நிறையை அளக்கப் பயன்படாத அலகு எது?

I. kg II. *l* III. g

02. 2319 எனும் எண்ணில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகையாக அமைவது எது?

I. 17 II. 13 III. 15

03. 1 யிற்கும் 10 யிற்கும் இடைப்பட்ட ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

I. 24 II. 19 III. 21

04. மு.ப 6.25 ஐ நியம நேரத்தில் எழுதும் போது கிடைப்பது.

I. 6 : 25 II. 18 : 25 III. 06 : 25

05. மூவாயிரத்து இருநூற்று ஐந்து எனும் எண்ணை முன்னாலிருந்து பின்னால் எழுதும் போது கிடைக்கும் எண்குறி யாது?

I. 5023 II. 5203 III. 3205

06. வடக்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் இடைப்பட்ட திசையின் எதிர் திசை யாது?

I. வடகிழக்கு II. தென்கிழக்கு III. தென்மேற்கு

07. உலக வர்த்தக மையத்தின் படம் காணப்படும் பணத்தாளின் பெறுமதி யாது?

I. ரூ. 100..00 II. ரூ. 500.00 III. ரூ. 1000.00

08. $\frac{3}{5}$ எனும் பின்னத்தின் சமவலுப்பின்னமாக அமையாத பின்னம் எது?

I. $\frac{12}{20}$ II. $\frac{9}{25}$ III. $\frac{30}{50}$

09. ஒரே வகையான முகங்களை மட்டும் கொண்ட திண்ம உருக்கள் எவை?

I. சதுரமுகி, கனவுரு II. உருளை, கோளம் III. நான்முகி, சதுரமுகி





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

10. 625 ÷ 5 எனும் கணிதச்செய்கையின் பெறுமானம் யாது?

I. 25 II. 20 III. 35

(10 x 2 = 20 புள்ளிகள்)

11. பின்வரும் கணிதச் செய்கைகளுக்கான விடையை எழுதுக.

I. 3 9 4 0 8
+ 2 0 5 4 6
_____
_____

II. 1 0 0 4 6
+ 7 9 4 8
_____
_____

III. 7 6 4 8
- 7 0 5 9
_____
_____

IV. 1 0 5 2 0
- 6 2 5 4
_____
_____

V. 4 2 9
x 6
_____
_____

VI. 9 4 3
x 8
_____
_____

VII. 6 9 8 ÷ 4 = ...

VIII. 9 9 0 ÷ 6 = ...


(8 x 2 = 16 புள்ளிகள்)


12. பின்வருவனவற்றை பொருத்தமானவற்றுடன் இணைக்குக.


I. 5kg 45g	ஒரே முகங்கள்
II. 3 9 6 + 2 9 7	12 விளிம்புகள்
III. கனவுரு	5 0 4 5 g
IV. சதுரமுகி	6 9 3


(4 x 1 = 4 புள்ளிகள்)

13. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு திண்ம உருவினது பெயர்களையும் எழுதி அவற்றின் உச்சி, முகம், விளிம்பு என்பவற்றின் எண்ணிக்கையை குறித்த இடத்தில் எழுதுக.

I.  = ... உச்சி - ..... முகம் - ..... விளிம்பு - .....

II.  = ... உச்சி - ..... முகம் - ..... விளிம்பு - .....

III.  = ... உச்சி - ..... முகம் - ..... விளிம்பு - .....

IV.  = ... உச்சி - ..... முகம் - ..... விளிம்பு - .....

(4 x 2 $\frac{1}{2}$ = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

பின்வரும் வினாக்களிற்கான சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

14. ஒரு செங்கல் அடுக்கில் 264 செங்கற்கள் காணப்பட்டன. எனின் அவ்வாறான 8 அடுக்குகளில் காணப்படும் செங்கற்களின் எண்ணிக்கை யாது? ……..

15. கமலாவின் நிறை 64kg 400g ஆகும். அவளது சகோதரி அவளது நிறையின் அரை மடங்கிலும் 3kg 350g நிறை அதிகமாக காணப்பட்டாள் எனின் இருவரினது நிறைகளின் கூட்டுத் தொகை யாது? ……


16. கம்பி வேலி ஒன்றை அமைப்பதற்கு வாங்கப்பட்ட இரண்டு கம்பிச் சுருள்களின் நீளங்கள் முறையே 3m 75cm, 9m 15cm ஆகும் எனவே அவ்விரு கம்பிச் சுருள்களினதும் மொத்த நீளம் யாது? ……..

17. சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 6cm ஆகும். அவ்வாறான 4 சதுரங்களை நேராக வைத்து ஆக்கப்படும் செவ்வகத்தின் சுற்றளவு யாது? ……

18. அரிசிப் பை ஒன்றின் நிறை 10kg ஆகும். அதிலிருந்து 800g நிறை கொண்ட எத்தனை அரிசிப் பைக்கற்றுக்களை பொதி செய்ய முடியும்? எஞ்சிய அரிசியின் நிறை யாது? ……..

(5 x 2 = 10 புள்ளிகள்)

19.



I. அருகில் உள்ள உருவில் $\frac{3}{4}$ ஐ நிழற்றுக.

II. நிழற்றப்படாமல் எஞ்சிய பகுதியை தசமத்தில் தருக.

……...

III. 4/7 எனும் பின்னத்திற்கு சமவலுப் பின்னங்கள் இரண்டு தருக. ……

(5 புள்ளிகள்)

20. கீழ்வரும் தரவினைக் கொண்டு அதன் கீழ் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

4 வகையான பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

பழம்	**மாணவர் எண்ணிக்கை**
அன்னாசி	26
மாதுளை	43
அப்பிள்	19
பப்பாசி	36

www.lkedu.lk

I. கூடுதலான மாணவர்கள் விரும்பும் பழத்தின் எண்ணிக்கைக்கும் குறைவான மாணவர்கள் விரும்பும் பழத்தின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ……..

II. அப்பிள் பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையினதும் பப்பாசி பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையினதும் மொத்த கூட்டுத்தொகை யாது? ……..

III. எவ்விரு பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 79ஆக காணப்படுகிறது? ……


IV. இத்தகவலை பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ……...

(4 x 2 $\frac{1}{2}$ = 10 புள்ளிகள்)

21. கமலன் பி.ப. 4.15 யிற்கு மைதானத்திற்கு சென்று 20 நிமிடங்களில் மைதானத்தை அடைந்தான். பின்னர் விளையாடி விட்டு பி.ப. 6.05 மணி அளவில் வீடு நோக்கிப் புறப்பட்டான் எனின் கமலன் மைதானத்தில் விளையாட செலவிட்ட நேரம் எவ்வளவு? ……..

22. 5 பந்துகளின் விலையானது 2 துடுப்புகளின் விலைக்கு சமனாகும். 5 துடுப்புகளின் விலை ரூ. 1250.00 எனின் ஒரு பந்தின் விலை யாது? …….

23. 6m நீளமான துணியிலிருந்து 40cm நீளமான 6 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டது. எனின் எஞ்சிய துண்டிலிருந்து 40cm நீளமான எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்க முடியும்? ……...

24.  கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள முற்பகல் நேரத்தை 24 மணிநேர கடிகார முறையில் எழுதுக. ……....

25. வீடொன்றின் மின்சார பட்டியலில் பாவிக்கும் முதல் 35 அலகுகளுக்கும் ஒரு அலகுக்கு ரூ. 5.00 வீதமும் அடுத்து வரும் 50 அலகுகளுக்கு ரூ. 8.00 வீதமும் அதன் பின்னர் பாவிக்கும் ஒவ்வொரு அலகிற்கும் ரூ. 13.00 வீதம் அறவிடப்பட்டது. எனின் 100 அலகுகளைப் பாவித்திருக்கும் ஒரு வீட்டிற்கு எவ்வளவு கட்டணமாக அறவிடப்படும். …….

(5 x 2 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

26. கீழ்வரும் விலைப்பட்டியலைக் கொண்டு அதன் கீழ் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

பொருள்	அளவு	விலை
சீனி	1kg	ரூ. 220.00
அங்கர்	1 பெட்டி	ரூ. 496.00
கோதுமை	1kg	ரூ. 130.00
கருவாடு	250g	ரூ. 400.00
பென்சில்	1 டசின்	ரூ. 96.00

I. சீனி 3kg மற்றும் கோதுமை 3kg வாங்கத் தேவையான தொகை எவ்வளவு? ……..

II. எவ்விரு பொருட்களை வாங்கும் விலைக்கு 1 பெட்டி அங்கர் வாங்க முடியும். ……..

III. 1 டசின் பென்சிலின் விலையை விட 1kg கோதுமை மாவின் விலை எவ்வளவு கூடியதாகும். ……...

IV. மேலுள்ள சிட்டையில் உள்ள எல்லாப் பொருட்களையும் வாங்கிய தனா ரூ. 2000.00 ஐ கடைக்காரரிடம் கொடுத்தான் எனின் அவனுக்கு மீதியாக எவ்வளவு கிடைக்கும். ……...

(4 x 2 $\frac{1}{2}$ = 10 புள்ளிகள்)

27. பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.

I. முதல் நான்கு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையை உரோம எண் குறியில் எழுதுக. ……...

II. 4cm 7mm யில் எத்தனை mm கள் உள்ளன? ……..

III. 6572 எனும் எண்ணை விரித்தெழுதுக. ……. + …… + …….. + ……..

IV. 4168, 4076, 3968, 5642 இவ்வெண்களை இறங்குவரிசையில் எழுது.

……..

V. சாதாரண வருடம் ஒன்றின் முதல் 5 மாதங்களில் உள்ள நாட்களின் கூட்டுத்தொகை யாது? ……...

(5 புள்ளிகள்)

www.ikedu.lk

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

IPL

புலமை மையம்

புள்ளி

தரம் - 05	சுற்றாடல்	நேரம் : 1.30 மணித்தியாலம்
சுட்டெண் :		ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151

01) 01 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. போமலின் இடப்பட்ட மீனை உண்பதனால் ஏற்படக் கூடிய விளைவு யாது?

I. உதடுகள் வீங்குதல் II. மயக்கம் ஏற்படல் III. ஒவ்வாமை ஏற்படல்

02. சீகிரியா குன்று அமையப்பெற்றுள்ள மாவட்டம் எது?

I. கண்டி II. நுவரெலியா III. மாத்தளை

03. முற்காலத்தில் அரிசியை இடித்து மாவாக்குவதற்கு பயன்படுத்திய உபகரணம் எது?

I. அம்மி II. உரல் - உலக்கை III. பிளன்டர்

04. நீரில் மிதந்து சென்று பரம்பலடையும் வித்து எது?

I. தேங்காய் II. பயறு III. ஆமணக்கு

05. மின் கட்டணத்தை செலுத்த முடியாத ஓர் நிறுவனம் எது?

I. பிரதேச செயலகம் II. வங்கி III. அஞ்சல் அலுவலகம்

06. அயடீன் அதிகளவு காணப்படும் உணவு எது?

I. வல்லாரை II. சோயா III. கடல் மீன்

07. அசுத்தமடைந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் எது

I. கொலரா II. நெருப்புக் காய்ச்சல் III. டெங்கு

08. சூரிய நமஸ்கார செயற்பாட்டின் 8வது படிமுறை குறிக்கும் படம் எது

I.  II.  III. 

09. இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த பெருக்க மரம் காணப்படும் இடம் எது

I. அநுராதபுரம் II. மன்னார் III. கண்டி

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

10. 'யாக்பெல்' எனும் சொல்லுடன் தொடர்புடைய மக்கள் யார்?

I. வேடுவர் II. சிங்களவர் III. தமிழர்

11. ஏறு வேர்களை கொண்ட தாவரம் எது?

I. ஆலமரம் II. கறுவா III. வெற்றிலை

12. மீன்கள் தாம் செல்லும் திசையை மாற்ற உதவும் உறுப்பு எது?

I. பூ II. வாற்செட்டை III. குதச்செட்டை

13. கடவுச்சீட்டை வழங்கும் நிறுவனம் எது

I. ஆட்பதிவு திணைக்களம் II. குடிவரவு குடியகழ்வு திணைக்களம்

III. மாவட்ட செயலகம்

14. பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாக செய்ய வேண்டியது

I. காயத்திற்கு கைம்மருந்து இடல்

II. காயத்தை துணியால் இறுக்கி கட்டுதல்

III. காயத்தை சுத்தமான நீரினால் சவர்க்காரமிட்டு கழுவுதல்

15.  உருவில் உள்ள இசைக்கருவி எவ்வகையை சேர்ந்ததாகும்

I. துளை கருவி II. கொட்டற் கருவி III. நரம்புக்கருவி

16. சட்டக காந்தம் ஒன்றின் வடமுனை எந்நிறத்தினால் காட்டப்படும்

I. சிவப்பு II. நீலம் III. பச்சை

17. பின்வருவனவற்றுள் தென்னையை தாக்கும் பிராணி அல்லாதது எது

I. கருவண்டு II. இலைப்பேன் III. செவ்வண்டு

18.  உருவில் காணப்படும் வீதிச்சமிக்ஞை உணர்த்துவது

I. பேருந்து நிறுத்துமிடம் II. வாகனம் நிறுத்தத் தடை III.வாகனம் நிறுத்துமிடம்

19. கட்டுநாயக்க அதிவேகப் பாதையை குறிக்கும் குறியீடு எது?

I. E – 01 II. E – 02 III. E 0 – 3

20.  உருவில் காணப்படும் உடுக்கோலம் யாது?

I. சிறுகரடி II. மிதுனம் III. துலாம்

(20 X 2 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

02) கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

01. பாற்சோறு முஸ்லிம்களின் விஷேட உணவாகும் ( )

02. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் D. S. சேனநாயக்கா ஆவார் ( )

03. முறையற்ற விவசாயச் செய்கை ஆனது மண்சரிவிற்கு காரணியாக அமைகிறது ( )

04. உட்கொள்ள வேண்டிய அளவை விட அதிகமாக மருந்தை உட்கொண்டால் நோய் விரைவாக குணமடையும் ( )

05. நீரின் மேற்பகுதியை விட அடிப்பகுதியிலேயே அமுக்கம் அதிகமாக இருக்கும் ( )

(10 புள்ளிகள்)

03) அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(பிரதேச செயலகம், டி.பி.ஜயா, M.C. சித்திலெப்பை, கணவாய், பிரதேச சபை, மரவண்டு, கிரிக்கெட், 1958, கரப்பந்து, 1990)

01. முஸ்லிம் நேசன் எனும் பத்திரிகையை வெளியிட்டவர் யார்? .....

02. இலங்கையின் தேசிய விளையாட்டாக காணப்படுவது எது? .....

03. எதிரியை கண்டால் கருமை நிற மை போன்ற திரவத்தை செலுத்தும் பிராணி? .....

04. பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றை பெற செல்ல வேண்டிய இடம் எது? .....

05. அவசர அம்புலன்ஸ் சேவைக்கான அவசர தொலைபேசி எண் எது? .....

(10 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. மெல்லிய தண்டினை உடைய தாவரங்கள் இரண்டு தருக.

1. ..... 2. .....

02. தலதா மாளிகை அமையப் பெற்றுள்ள மாவட்டம் எது?

.....

03. வீட்டில் உள்ளோர் தனியாகப் பயன்படுத்தும் பொருட்கள் 2 தருக.

1. ..... 2. .....

www.lkedu.lk

04. வெவ்வேறு வடிவக் காந்தங்கள் இரண்டு தருக.

1. ……. 2. ……

05. சேனைகளில் பயிரிடப்படும் தானிய வகைகள் 2 தருக.

1. ……. 2. ……

06. மனிதனது அடிப்படைத் தேவைகள் 3 தருக.

1. …….. 2. ……

3. ……..

07. இலங்கையில் காணப்படும் நீர்வீழ்ச்சிகள் 3 தருக.

1. …….. 2. ……

3. ……..

08. நாம் தகவல்களை அறிந்து கொள்ளும் இலத்திரனியல் ஊடகங்கள் மூன்று தருக.

1. …….. 2. ……

3. ……..

09. துட்டகைமுனு மன்னனால் கட்டப்பட்ட விகாரைகள் இரண்டு தருக.


1. ……. 2. ……

10. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள் மூன்று தருக.

1. …….. 2. ……

3. ……... **(10 X 2 = 20 புள்ளிகள்)**

05) கீழ் காணப்படும் இலங்கையின் தேசிய இலட்சினையில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படுவனவற்றின் பெயர்களை எதிரே எழுதுக.



A. ……. D. …….


B. ……. E. ……..

C. …….

(5 புள்ளிகள்)

www.lkedu.lk

06) கீழ் காணப்படும் தாவரமொன்றின் பகுதிகளின் பெயர்களை உரிய ஆங்கில எழுத்திற்கு எதிரே எழுதுக.



A. ……. D. …….

B. ……. E. ……..

C. …….

(5 புள்ளிகள்)

07) கீழ் காணப்படும் உருவில் உள்ளவற்றின் பெயர்களை எழுதுக.

01. 

……..

02. 

……

03. 

……

04. 

……

05. 

……

(10 புள்ளிகள்)